DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

Case No CC.No. 100/2023 Addl W.1 PW– 8

| | |
|---|---|
| Name | : கார்த்திகேயன் |
| Father's/Husband's Name | : சுப்பிரமணியன் |
| Village | : சிறப்பு சார்பு ஆய்வாளர் |
| Taluk | : நத்தம் காவல்நிலையம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 54/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26th day of March 2026

( 1, 3 முதல் 6 எதிரிகள் ஆஜர், 2, 8 எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. 7ம் எதிரி இறப்பு. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

**1.** நான் தற்போது நத்தம் காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர் திரு.பிச்சைமணி அவர்கள் இறந்துவிட்டதால் அவருடன் பணிபுரிந்த வகையில் அவரது கையெழுத்து எனக்கு நன்கு தெரியும் என்பதாலும், ஆவணங்களைப் பார்த்து சாட்சியம் அளிக்க அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டதன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 12.05.2020ம் தேதி பகல் 12.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் திரு.பிச்சைமணி அவர்கள் நத்தம் காவல்நிலையத்தில் பொறுப்பில் இருந்தபோது, திண்டுக்கல் மாவட்டம், நத்தம், பன்னியாமலையைச் சேர்ந்த ஏகாந்தம் மகன் ராஜா, வயது 45 என்பவர் நிலையம்

ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரைப் பெற்று அதன் பேரில் 190/2020 என்று மனு ரசீது கொடுக்கப்பட்டிருந்த புகார் மனுவைப் பார்வையிட்டு அதன் தன்மைக்கேற்ப நத்தம் காவல்நிலைய குற்ற எண். 390/2020 சட்டபிரிவுகள் 147, 294(பி), 323, 341, 427, 506(2) இ.த.ச.வாக வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார். **( முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

2. புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையின் அசலை கனம் நத்தம் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை அவர் தன்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, 12.05.2020ம் தேதி 13.00 மணிக்கு சம்பவ இடமான பன்னியாமலை கிராமத்தில் ஊருக்கு மேற்கே உள்ள இடத்தில் வைத்து சாட்சிகள் கருப்பன் மற்றும் வெள்ளைச்சாமி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, மாதிரி வரைபடம் வரைந்து பார்வைமகஜர் தயார் செய்துள்ளார். **(மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.5 ஆகும். பார்வைமகஜர் அ.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. பின்னர் சாட்சிகள் ராஜா, ஜெயசந்திரன், சித்ரா, குருசாமி, சின்னக்கருப்பன், வெள்ளைச்சாமி, ராம்குமார் மற்றும் சக்தி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு இவ்வழக்கின் 1 முதல் 8 வரையிலான எதிரிகள் மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணையில் சென்றுள்ளதால் அவர்களை கைது செய்யவில்லை. இவ்வழக்கில் காயம்பட்ட ஜெயச்சந்திரன் என்பவருக்கு சிகிச்சை அளித்த நத்தம் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.சிவக்குமார் என்பவரை விசாரித்து சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கு விசாரணை முடித்து எதிரிகள் மீது கடந்த 06.02.2021ம் தேதி சட்டபிரிவுகள் 147, 294(பி),

323, 341, 427, 506(2) இ.த.ச.வின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

4) இவ்வழக்கில் 07.05.2020ம் தேதி நடந்த சம்பவத்திற்கு மறுநாள் 08.05.2020ம் தேதி புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 5 நாட்கள் காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், அதற்கு முன்பு மனு ரசீது கொடுக்கப்பட்டு விசாரணைக்கு பின்பு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. மனு ரசீதை இந்த வழக்கில் ஆவணமான தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் அ.சா.1 கொடுத்த புகார் மனு யார் சொல்லி எழுதப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் ஜெயச்சந்திரன் என்பவர் மருத்துவரிடம் தன்னை அடையாளம் தெரிந்த 4 நபர்கள் தாக்கியதாகத்தான் தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். புகார் மனுவில் 8 நபர்கள் தாக்கியதாக தான் மிகைப்படுத்தி தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

5) விபத்து பதிவேட்டில் சம்பவமானது 08.05.2020ம் தேதி 11.00 மணிக்கு நடந்ததாக மருத்துவரிடம் தெரிவித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த புகாரில் பக்கம் 2ல், 2ம் எதிரியான வெண்ணிலா என்பவர் காரில் இருந்த நபர்களை சட்டையை பிடித்து இழுத்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரில் யாரை சட்டையை பிடித்து இழுத்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். காயச்சான்றிதழில் சம்பவம் 1ம் எதிரியின் வீட்டிற்கு முன்பாக நடந்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அ.த.சா.ஆ.3ல் அ.சா.2 எந்த தேதியில் சிகிச்சையிலிருந்து விடுவிக்கப்பட்டார் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

6) வழக்கு சம்பவத்திற்கு முன்பு அ.சா.2ஐ 3,5 எதிரிகளான ஸ்ரீதர் மற்றும் திருமலை ஆகியோர் அசிங்கமாக பேசியதாகவும், அதனை வீடியோ எடுத்து மற்ற நபர்களுக்கு அனுப்பியதாக போலீசார் விசாரணையில் சொல்லிய நிலையில், அந்த சம்பவம் தொடர்பாக புகார் எதுவும் கொடுக்கப்பட்டதா என்றால் ஆவணங்களை பார்த்தவகையில் இல்லை. வீடியோ சம்பந்தமான ஆவணங்கள் புலன் விசாரணை அதிகாரிகளால் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். இரும்பு ராடு மற்றும் கட்டை கம்பு ஆகியவை கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற பிணையில் எதிரிகள் சென்றுவிட்டதால் கைப்பற்றப்படவில்லை. ரக்கக்கறைபடிந்த அ.சா.2ன் ஆடைகளை புலன்விசாரணை அதிகாரி கைப்பற்றவில்லை என்றால் சரிதான்.

7) எதிரிகள் சேதப்படுத்தியதாக சொல்லப்படும் TN 38 BH 8704 என்ற பதிவெண்கொண்ட பொலிரோ காரை வட்டார போக்குவரத்து அதிகாரிக்கு ஆய்விற்கு அனுப்பவில்லை என்றால் சரிதான், பொதுவாக விபத்து வழக்குகளுக்கு தான் அங்கு அனுப்பப்படும், தனியார் கடைகளில் வாகனத்தை சரிசெய்யவிட்டு சேதமதிப்பு குறித்து அவர்களிடம் அறிக்கை பெற்று சமர்ப்பிக்கப்படும். தனியார் கடையானது அரசு அங்கீகாரம் பெற்று நடத்தப்பட்டதா என்றால் ஆமாம். ஆனால் அந்த விபரங்கள் பெறப்படவில்லை. காரில் வரும்போது எதிரிகள் கல்லால் எறிந்ததில் அ.சா.1, அ.சா.3,அ.சா.4 ஆகியோருக்கு காயம் ஏற்பட்டதாக புகார் மனுவில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். காருக்கு ஏற்பட்ட சேதமதிப்பு குறித்து இவ்வழக்கில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் இல்லை என்றால் சரிதான்.

8) பட்டியல் சாட்சி 7 ராம்குமார் போலீசார் விசாரணையில் காரின் முன்பக்க கண்ணாடி தேமாகியிருந்தது என்றும், அதைதான் சரிசெய்து கொடுத்ததாக தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். வேறு எங்கும் சேதம் ஏற்பட்டதாகவோ, அதை சரிசெய்ததாகவோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.சா.6 சக்தி

என்பவர் போலீசார் விசாரணையில் ஏகாந்தம், சின்னம்மாள் மற்றும் சிலரை சம்பவ தினத்தன்று நத்தம் மூன்றுலாந்தர் இடத்தில் இறக்கிவிட்டதாக தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். நத்தம் அரசு மருத்துவமனைக்கு வந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.2, அ.சா.4 ஆகியோர் சம்பவம் தொடர்பாக தனிப்பட்ட முறையில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் பொன்னுச்சாமி மற்றும் செம்பன் சம்பவ இடத்திற்கு வடகிழக்கு பகுதியில் உள்ள வீட்டில் வசிக்கும் மேற்படி நபர்களை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான், அவர்கள் சம்பவ சமயம் இருந்தார்களா, சம்பவத்தை பார்த்தார்களா என்பதை பொறுத்து தான் விசாரிக்க இயலும். சம்பவ இடத்திற்கு தென்கிழக்கில் தனலெட்சுமி என்பவரது பெட்டிக்கடையும், அதற்கும் கிழக்குபுறம் அ.சா.1 ராஜாவின் பெரியப்பா பெரியசாமி, சித்தப்பா செல்லம் ஆகியோரது வீடு உள்ளது என்றாலும், அவைகள் இவ்வழக்கில் மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புலன்விசாரணை அதிகாரி மேற்படி நபர்களை விசாரித்தால் உண்மை விபரம் தெரியவரும் என்பதால் தான் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

9) இவ்வழக்கில் 4ம் எதிரி சுரேஷ் என்பவரை சம்பவ தினத்தன்று அ.சா.2 ஜெயச்சந்திரன் கத்தியால் குத்தியது சம்பந்தமாக கு.எண்.391/2020 வழக்கு பதிவு செய்யப்பட்டு, C.C.72/2022 என்ற வழக்கு நிலுவையிலுள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. எதிரிகள் அ.சா.1 ராஜா பன்னியாமலையில் சட்டவிரோதமாக கல்குவாரி நடத்திவருகிறார் என்று புகார் கொடுத்திருந்தார்கள் என்றாலும், அதனால் முன்விரோதம் கொண்டு எதிரிகள் மீது பொய்யாக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகள் மருத்துவமனையில் சென்று பிரச்சினை செய்ததாக மருத்துவமனையில் பணிபுரிந்த யாரும் இவ்வழக்கில் புகார் கொடுத்ததாக இல்லை என்றால் சரிதான். அ.சா.2 ஜெயச்சந்திரனின் இருசக்கர வாகனத்தையும், செல்போனையும் எதிரிகள் சேதப்படுத்தியதாக சொல்லும்

நிலையில், அதை வழக்கு சொத்தாக கைப்பற்றி வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

10) உடைந்த காரின் கண்ணாடி துண்டுகள் சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை 8 நாட்கள் காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சார்பு ஆய்வாளர் அ.சா.1டம் புகார் மனு எதுவும் பெறவில்லை என்றால் சரியல்ல. அதனடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. சார்பு ஆய்வாளர் சம்பவ இடம் செல்லாமல் வழக்கு ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்துள்ளார் என்றால் சரியல்ல. 4ம் எதிரி அ.சா.2ன் மீது கொடுத்த புகாரிலிருந்து தப்பிக்க எதிரிகள் மீது பொய் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,
Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.03.26 15:49:58 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்